# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 18.06.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 2896/B/2022**

திரு. M. காசிமாயன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம்,
தருமபுரி மாவட்டம்-636810. -- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 26.12.2024 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:-

- ***உதவி திட்ட இயக்குநர் (ஊராட்சிகள்), தருமபுரி மாவட்டம் அவர்கள் இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், திரு. V. சக்திவேல், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) அவர்களை நேரடியாக அழைத்து விசாரணை மேற்கொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், திரு. V. சக்திவேல், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) மற்றும் அன்றைய பொதுத் தகவல் அலுவலர், திருமதி. S. விஜயா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) ஆகியோர் மீது ஏன் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற விளக்கத்தினையும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் அவர்கள் மீது ஏன் தண்டம் விதிக்கக்கூடாது என்று விளக்கத்தினையும் பெற்று ஆணையத்திற்கு அந்த விளக்கத்தின்மூலமாக பொதுத் தகவல் அலுவலருக்கு தண்டணை விவரத்தை அளிக்க வேண்டுமென்றும் மற்றும் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் எந்தவித முன்னேற்பாடும் இல்லாமல் ஆணையத்திற்கு வந்தது கண்டிக்கத்தக்கது அதுகுறித்து விளக்கத்தை அறிக்கையாக பெற்று, அந்த அறிக்கையை இந்த ஆணையத்திற்கு 29.04.2025 அன்று சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.***
- ***மேலும் திட்ட இயக்குநர், தருமபுரி மாவட்டம் அவர்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களை அழைத்து அவர்களுக்கு ஆணையத்தின்முன்பு ஆஜராகும்போது தகுந்த முன்னேற்பாடுடன் ஆஜராக போதுமான பயிற்சி அளித்து, பயிற்சி குறித்த அறிக்கையை தயார் செய்து இந்த ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது.***
- ***தங்களுடைய உத்தரவினை சம்பந்தப்பட்ட ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களுக்கு தகவலாக வழங்கும்படி இந்த ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***
- ***ஏற்கனவே கடந்த ஒரு வருடமாக வட்டார வளர்ச்சி அலுவலரும், பொதுத் தகவல் அலுவலரும் சரியான புரிதல் இல்லாமல் ஆணையத்தில் ஆஜராகுவது குறித்து ஒரு உத்தரவு அளிக்கப்பட்டிருந்தும், அந்த உத்தரவின்மீது என்ன சுற்றறிக்கை அனுப்பினார் என்ற தகவலும் இந்த ஆணையத்திற்கு இதுநாள்வரையிலும் தெரியவில்லை. இந்த குறிப்பினையும் இந்த ஆணையம் அரசு கூடுதல் தலைமை செயலாளர், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்களுக்கு தெரிவிக்கின்றது.***

மேற்படி உத்தரவின்படி, உதவி திட்ட இயக்குநர் (ஊராட்சிகள்), தருமபுரி மாவட்டம் அவர்கள் 29.04.2025 அன்று ஆணையத்தின்முன்பு நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து, உதவி திட்ட இயக்குநர் (ஊராட்சிகள்), தருமபுரி மாவட்டம் அவர்கள் மீது காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கோரப்படுகின்றது.

மேற்படி இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பாணையின்மீது உதவி திட்ட இயக்குநர் (ஊராட்சிகள்), தருமபுரி மாவட்டம் அவர்கள் உரிய காலத்திற்குள் விளக்கம் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், உதவி திட்ட இயக்குநர் (ஊராட்சிகள்), தருமபுரி மாவட்டம் அவர்களிடமிருந்து விளக்கங்கள் ஏதும் பெறப்படவில்லை என தீர்மானித்து தக்க நடவடிக்கை பரிந்துரை செய்யப்படுமென உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**இணைப்பு: காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice)**

**<u>வழக்கு எண். CP 2896/B/2022</u>**

**பெறுநர்**

உதவி திட்ட இயக்குநர் (ஊராட்சிகள்),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
தருமபுரி மாவட்டம்-636701.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. M. காசிமாயன்,
சட்டம் மற்றும் சமூக ஆர்வலர்,
எண்.70, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு,
அய்யப்பாக்கம்,
சென்னை - 600 077.
செல்.9841571538.

Copy to: File GP PC